**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 171** **நாள் : 12.07.2025**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணியினைத் தொடங்கி வைத்தார்.**

இன்று (12.07.2025) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணியினைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-170க்குட்பட்ட கலிகுன்றம் பிரதான சாலையில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ், ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடம் மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் ஆகியவற்றை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-172, கன்னிகாபுரம், வேளச்சேரி பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.39.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, மடுவின்கரை, ஐந்து பர்லாங் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளியில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடுதல் பள்ளிக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு-175க்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு காலனி 3வது அவென்யூ, வேளச்சேரி சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் சிங்கார சென்னை திட்டத்தின் கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் ஏ.எஸ்.கே. நகர் பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.24.86 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் ஆகியவற்றைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ஏ.எஸ்.கே.நகர் பிரதான சாலையில் ரூ.9.91 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட புதிய மற்றும் சிறிய உயர்கோபுர மின்கம்பங்களை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

வார்டு-172க்குட்பட்ட நேரு நகரில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.37.66 இலட்சம் மதிப்பீட்டில் 44 கம்பங்களில் பொருத்தப்பட்ட 120 கண்காணிப்பு கேமராக்கள் பயன்பாட்டினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.எம்.எச்.அசன் மௌலானா, துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.பிரதிவிராஜ், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு. இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி மு. மகேஸ்வரி முருகவேல், திரு.எஸ். பாஸ்கரன் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**